JAFFNA COLLEGE UNDERGRADUATE LIBRARY 27 JUL 1972

Registered as a Newspaper in Ceylon விலைசதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் [illegible] எண் 49
[illegible]

தேசிய தினசரி

மலர் 14
இதழ் 167

யாழ்ப்பாணம் ஆடி 12 ரபி; அவ், 15 வியாழக்கிழமை (27-7-72)

ஆடவராயினும் அரிவையராயினும்
ஏற்றதோர் தோற்றம் தருவதற்கு

கண்ணைக் கவரும் வண்ணங்களில்
நெஞ்சைக் கவரும் ரகங்களில்

சிறந்த உயர்தர ஜவுளிகளுக்கும்
றெடிமேட் உடுப்புகளுக்கும்

**ராஜ்கோபால்ஸ்**

(பிரபல ஜவுளி மாளிகை)
பெரியகடை — யாழ்ப்பாணம்

# மன்னார்க் கடலில் இந்திய-இலங்கை மீனவர் மோதல்!

## கடற்படையினர் ரோந்து; பாதுகாப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், வியாழன் — தலைமன்னார்க் கடலில் இலங்கைக் கடற்பிரதேச எல்லைக்குள் இந்திய மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்குமிடையில் சமீபத்தில் கைகலப்பு ஒன்று ஏற்பட்டதாகவும் மீண்டும் இதுபோன்று கைகலப்பு ஏற்படலாம் என மன்னார்ப்பகுதி மீனவர் அச்சமடைந்து கடலுக்குச் செல்லத் தயங்குவதாகவும், கடற்படையினர் இப்பகுதியில் ரோந்து புரியவேண்டுமென்றும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் பாதுகாப்பு அமைச்சைக் கேட்டுள்ளனர். இதைத் தொடர்ந்து தலைமன்னார்க் கடற்பகுதியில் கடற்படையினர் ரோந்துபுரியத் தொடங்கியுள்ளனர்.

தலைமன்னார்க் கடலில் இலங்கைக் கடற்பிரதேசத்துக்குள் இந்திய மீன்பிடிப் படகுகள் பிரவேசித்து மீன் பிடிக்கச் செல்லுவதுடன், இலங்கைக் கடற்பகுதியிலுள்ள மீன்பிடிப் போடும் வலைகளையும் அந்தப் படகுகள் அறுத்துச் சேதப்படுத்தி விடுவதாகவும் தமக்குப் புகார் கிடைத்துள்ளதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் பாதுகாப்பு அமைச்சுக்கும், இலங்கைக் கடற்றொழில் கைத்தொழில் அமைச்சருக்கும் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

இந்திய மீனவருக்கும், இலங்கை மீனவருக்குமிடையில் சமீபத்தில் தலைமன்னார்க் கடலில் கைகலப்பு ஏற்பட்டதாகவும் இதுபோன்று மீண்டும் ஒரு சம்பவம் ஏற்படக்கூடிய அறிகுறிகள் தோன்றியிருப்பதாகவும், இதனால் அச்சமடைந்துள்ள மன்னார்

8-பக்கம் பார்க்க

மத்தியகிழக்குப் பிரச்னை;

## சமரசப்பேச்சை ஆரம்பிக்க திருமதி மெயர் வேண்டுகோள்

டெல்அவிவ், ஜூலை 26 — மத்திய கிழக்கு பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்கு சமரசப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும்படி இஸ்ரேல் பிரதமர் திருமதி கோல்டா மெயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எகிப்து ஜனாதிபதி ஜனாப் அன்வர் சதாத்துக்கு தனிப்பட்ட முறையில் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

இஸ்ரேலிய ஆட்சிமன்றத்தில் திருமதி மெயர் உரை நிகழ்த்தினார்.

"அழிவுப் பாதையை நோக்கிச் செல்லுவதை விடுத்து சமாதானப் பாதையைச் சோதித்துச் செல்வதற்கான காலடி எடுத்து வைப்போம்! என்று வேண்டுகோள் விடுத்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியாவிட்டாலும், இடைக்கால சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான யோசனையொன்றைத் தெரிவித்தார்.

சூயஸ் கால்வாயைத் திறந்து இடைக்கால சமாதானத்தை ஏற்படுத்தலாமா மெயர் கேட்டுக் கொண்டார்.

வடபகுதி அசைஸ் விசாரணை

## சத்திரத்தடி கொலைவழக்கு; நாளை காலை விசாரணை

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணம் சத்திரத்தடி கொலைவழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டு நீதியரசர் ஜெயபத்திராஜா முன்னிலையில் இம்மாதம் 28-ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

இப்பருவகால விசாரணைக்குப் போடப்பட்டிருந்த இவ்வழக்கு அடுத்த பருவகால விசாரணைக்கும் பின்போடப்பட்டிருந்தது.

இவ்வழக்கு மீண்டும் இப்பருவகால விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

இவ்வழக்கில் யாழ்ப்பாணம் சத்திரத்தடியில் 5-1-71-ல் எஸ் தம்பிராசா, பி. கணேசலிங்கம், ஏ. ஞானசேகரம், கே. கனகராசா ஆகியோர் சந்திரசிவம் சற்குணசிங்கத்தைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

அருணோதயக் கல்லூரி

விளையாட்டுப் போட்டி

இப்போட்டி 29-7-1972 சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். பெற்றோர் பழைய மாணவர் கல்லூரியின் நலன் கருதுவோர் ஆகிய அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[தனிப்பட்ட அழைப்பு இல்லை]

அதிபர், ஆசிரியர், மாணவர்.

4312

## ஆலயக் கதவுகள் திறந்தன

யாழ்ப்பாணம், வியா. வல்லிபுரக் கோயில் நேற்றுத் திறக்கப்பட்டது. கோவில் முகாமையாளர் திரு. [illegible] பிரதிநிதி திரு. வல்லிபுரம் அரசாங்க வழக்கறிஞர் முன்னிலையில் பொலிசார் முன் ஆலயத்தைத் திறப்பதாக எழுத்துமூலம் வாக்குறுதியளித்தார். பின்னர் உடுப்பிட்டித் தொகுதிப் பிரதிநிதி திரு க. ஜெயக்கொடியும் மற்றும் பலருடனும் சென்று திரு வல்லிபுரம் ஆலயக்கதவுகளைத் திறந்ததாக கடைசியாகக் கிடைத்த செய்தி கூறுகிறது.

## ஒழுங்கான இளைஞர்களை உருவாக்க 'கடேட்' பிரிவு

### பிரதமர் ஆரம்பித்துவைத்தார்

கொழும்பு, புதன் — சட்டத்துக்குக் கட்டுப்பட்ட ஒழுங்கான இளைஞர்களை உருவாக்கும் பணியை நோக்கமாகக் கொண்டே இலங்கை பொலிஸ் "கடேட்" பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இன்று மாலை கூறினார்.

கொழும்பு பொலிஸ் தலைமை அலுவலகத்தில் நடந்த பொலிஸ் கடேட் பிரிவு ஆரம்ப வைபவத்தில் பிரதமர் உரையாற்றினார். பிரதமர் இப்பிரிவை ஆரம்பித்துவைத்தார்.

மாணவர்கள் பொலிஸ் சேவையில் சேர்ந்துகொள்ள வேண்டுமென்ற அவசியமில்லையாயினும், "கடேட்" பிரிவில் சேர்ந்துகொள்ளும் மாணவர்களுக்கு பொலிஸ் சேவையில் முதலிடம் அளிக்கப்படுமென்றார் பிரதமர்.

## தெட்சணாமூர்த்தி இன்று தவில்வாசிப்பார்

யாழ்ப்பாணம், வியாழன் — அளவெட்டி குருக்கள் கிணற்றடிப் பிள்ளையார் கோயில் பூங்காவனத் திருவிழா இன்று நடைபெறுகிறது. அகில இலங்கை இசைப் புகழ் தவில் மேதை திரு. வி. தெட்சணாமூர்த்தி இத்திருவிழாவில் தவில் கச்சேரி செய்வதற்கென வந்துள்ளார். முத்துச்சப்பறத்தில் சுவாமி வீதிவலம் வருவார்.

நாகம்ஸ் (கன்னாகம்) ராமராவ் (இரு வேடங்களில்) நடித்த
தினசரி 6-30, இரவு 9-45 சனி ஞாயிறு 2-30
அபூர்வ பிறவிகள்
29-ந் திகதி முதல்
M S சுப்புலக்ஷ்மி—Y V ராவ் நடித்த
சத்தியவான் சாவித்திரி

ராணி (யாழ்ப்பாணம்) ஜெமினி—பத்மினி நடித்த
தினசரி 4 காட்சிகள்
மல்லிகா

ராஜா (யாழ்ப்பாணம்) ராஜேந்திரகுமார் வைஜந்திமாலா நடித்த
தினசரி 4 காட்சிகள்
GANWAAR
கவார்
(ஈஸ்ட்மென் கலர்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்) எம்.ஜி. ஆர்.-சரோஜாதேவி நடித்த
தினசரி 4 காட்சிகள்
குடும்பத் தலைவன்
29-ம் திகதி முதல்
பத்தாம் பசலி

இப்பொழுது திரையிடப்படுகிறது
வெலிங்டன் (யாழ். நகர்) லிடோ
தினசரி 2-30, 6-30, 10-00
சனி, ஞாயிறு 10-30
தினசரி காலை 10-00
பி. ப. 2-00, மாலை 6-00
இரவு 9-30
மற்றும்
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா
★ சிவாஜி
★ சரோஜாதேவி
★ முத்துராமன்
★ லக்ஷ்மி
★ சோ
மனோரமா
அஞ்சலிதேவி
நடித்த
முக்தா பிலிம்ஸ்



அருணோதயம்
டைரக்ஷன்: வி. சீனிவாசன்
இசை: கே. வி. மகாதேவன்

## வரவேற்க ஏற்பாடு

மருத்திந்துறை, புதன் கம்யூனிஸ்ட் (பீக்கிங் சார்பு) கட்சிச் செயலாளர் திரு: நா. சண்முகதாசனுக்கு வரவேற்பளிப்பதற்கான ஏற்பாடுகள் இப்பகுதியில் நடைபெற்றுவருகின்றன. மருத்திந்துறைக் கடற்கரையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் தொழிற்சங்கவாதிகள் பலர் உரையாற்றுவர்.

பவானி சினிமா
மூளாய்
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30 மெட்னி
ஜெமினி-வாணிஸ்ரீ
நடித்த
தபால்காரன் தங்கை

வெஸ்லி சினிமா
(கனியிவாசம்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
சிவாஜி - பத்மினி
நடித்த
காவல் தெய்வம்
தினசரி காலை 6-30
THE SERGENT

நியூ கலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
சனி ஞாயிறு பி. ப. 2-30
ஜெய்சங்கர்-வாணிஸ்ரீ
நடித்த
மனச்சாட்சி

REGAL (Jaffna)
Daily 3-15 & 7-15 p. m.
Burt Lancaster
in
THE SCALPHUNTERS
(Panavision color)

தினசரி 2-00, இரவு 9-45
ரவிச்சந்திரன்-
சரோஜாதேவி
நடித்த
ஓடும் நதி

சாந்தி சங்கானை
தினசரி 6-30, 9-45
ஜெய்சங்கர்-விஜயகுமாரி
நடித்த
டீச்சரம்மா

யாழ் தியேட்டர்
(காங்கேசன்துறை)
தினசரி 6-30 இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
SEVEN GOLDEN MEN
STRIKE AGAIN

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p m
Sat. Sunday 10-30
CITY BENEATH
THE SEA

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சாப்டிங்கில் 1 தொடக்கம் 7 அங்குலம்வரைக்கும் (M. S. Shafting) வேண்டிய அளவுகளில் மலிவாகக் கிடைக்கும். ராஜா மெஷின் கொம்பனி, 35, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4853

காணி: காங்கேசன்துறை-கீரிமலை ரோட்டில் மவிட்டபுரம் சமபக் காரியாலயத்துக்கு முன்னால் வீடு கட்டக்கூடிய 6 பர. v. c. 15 1/2 குழி விசாலமுள்ள காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: வழக்கறிஞர் சுந்தரலிங்கம், உடுவில். 4900

### வைத்தியம்

ஹோமியோ வைத்தியன். லண்டன் ஹோமியோபதி சங்கத்தின் முத்திங்கள் வெளியீடு. ஹோமியோபதி டாக்டர்களின் பகிஷ்கரிப்பும் பிரசாரமாகும். வருடச் சந்தா ரூபா 5/-. விபரங்களுக்கும் விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளவும். 131, நாவலர்வீதி, (ஐந்து சந்தி) யாழ்ப்பாணம். 4878

யாழ். ஹோமியோபதி கிளினிக் - சகல நோய்களுக்கும் ஜேர்மன் ஹோமியோபதி மருந்துகள் நிரந்தர நிவாரணமளிக்கின்றன. கல்கத்தாவில் பட்டம் பெற்று நாடு திரும்பியுள்ள டாக்டரை இன்று நாடுங்கள். 35, சப்பல்வீதி, (முதலாம் குறுக்குத்தெரு சந்தி.) யாழ்ப்பாணம். 4864

## மின்சாரம் கிடைத்தது

மாவிட்டபுரம், புதன் காங்கேசன்துறை பகுதியில் சைவ எல்லைக்குள் அமைந்துள்ள இடத்தவரை வீதிக்கு மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. பல வருடகாலமாக இப்பகுதி இருளில் மூழ்கியிருந்தது. இதே போல மற்றும் பல வீதிகளுக்கும் மின்சாரம் வழங்க படிவங்களைத் தலைவர் திரு. க. ஜெயபாலசிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

### கல்வி

G. C. E. (சாதாரணம்) பின்னேரங்களிலும், சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் கணிதம், ஆங்கிலம் கற்பிக்கப்படுகின்றது. இறவுன் போதனா நிலையம், 8, கண்டி வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். 4883

## 31ம் திகதி முடிவடையும்

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீமுனீஸ்வரர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் பிஷேகத்தின் நிறைவு நாளான இம்மாதம் 31-ம் திகதிமாலை பூஜை சங்காபிஷேகத்தின்பின் பெருமான் வீதிவலம் வருவார். 30-ம் திகதிமுடிவடைவதாயிருந்த இவ்விழா 31-ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

## ஒன்றரை லட்சம் செலவில் தேர்

அக்கரைப்பிட்டி, புதன் வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவிலுக்கு ஒன்றரை லட்சம் ரூபா செலவில் புதிய சித்திரத்தேரொன்று உருவாக்கப்பட்டுவருகின்றது. இதற்கான வேலைகளை நாட்டு கலைஞர் திருநெல்வேலி சிற்பாசாரி திரு. ஆ. சிவராசாவினதால் ஆரம்பிக்கப்பட்டது.

## இன்று

நீர்வேலி வியாழன் நீர்வேலிக்கந்தசுவாமி தேவஸ்தான அஷ்டோத்தர சத கலசயுக்த சங்காபிஷேகம் மகாபிஷேகம் நடைபெறுகிறது. இன்று வியாழக்கிழமை காலை ருத்திர, சந்திரநாம தோத்திர சடாக்ஷர மாராயணத்துடன் திரவியாபிஷேகம் நடைபெறும்.

## மரண அறிவித்தல்

### தியாகராசா

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை வேர்க்செஹப் சுப்பிரிண்டன் தியாகராசா காலமாகி விட்டார். இவர் சங்கானை சின்னத்தம்பி கனகம்மா தம்பதிகளின் புதல்வரும் தர்மதேவியின் அன்புக்கணவரும், ரூபகுமாரின் அன்புத்தந்தையும், நவரத்தினம் (சீமெந்துத் தொழிற்சாலை, புத்தளம்), கனகேஸ்வரி, நகுலேஸ்வரி, சரஸ்வதி இராசேஸ்வரியின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ஆசிரியர் சண்முகம், டாக்டர் மகேந்திரா (கும்புக்கேணை), இராசரத்தினம் (வெள்ளவத்தை மக்கட்களப்பு) ஆகியோரின் அன்புமைத்துனரும், தாமோதரம்பிள்ளை (மலாயன் பென்சனியர்) தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், திருமதி தியாகராசா (கோலாலம்பூர்) விக்னேஸ் கட்டுடையை சாவகச்சேரி, இரத்தினவேல் (சுழிபுரம்) ஆகியோரின் அன்புமைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-7-72 வியாழக்கிழமை சங்கானையில் நடைபெறும்.

அறிவிப்பவர்:- க. சின்னத்தம்பி, No. 21, தொட்டுக்குடி, சங்கானை. 4311

### போர்க்கைதிகள் விடுதலையானால்

# அக்டோபருக்குள் அமெரிக்க படைகள்யாவும் விடுதலையாகும்!

## யு. எஸ். பிரதிநிதிகள் சபை கமிட்டி தீர்மானம்

நியூயோர்க், ஜூலை 26

வட வியட்னாமியர் கைது செய்து சிறையில் வைத்திருக்கும் அமெரிக்கப் போர்க் கைதிகளை விடுதலை செய்தால் அக்டோபர் மாதம் முதலாந் திகதிக்குள் இந்தோ சீனாவிலுள்ள அமெரிக்கத் துருப்புக்களை அமெரிக்கா விலக்கிக்கொள்ளும்.

இவ்வாறு கூறும் தீர்மானம் ஒன்று அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் வெளிவிவகாரக் கமிட்டியினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

முதன்முறையாக அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் வெளிவிவகாரக் குழுவின் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அந்தத் தீர்மானத்தில் வட வியட்னாம் சிறையில் வைத்திருக்கும் அமெரிக்கப் போர்க் கைதிகளை முற்றாக விடுதலை செய்வதோடு ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் போர் நிறுத்தமும் செய்யவேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

இதற்கு முன்பாக வட வியட்னாமியர் கைதுசெய்து வைத்திருக்கும் அமெரிக்கப் போர்க் கைதிகளை விடுதலை செய்யவேண்டுமென்றும் இந்தோ சீனாவிலுள்ள அமெரிக்கப் படைகளுக்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைக்கவேண்டும் என அமெரிக்கச் செனட் சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருந்தது.

### அரசபோகம் துறக்கும் இளவரசி

பாங்கொக், ஜூலை 26

தாய்லாந்து மன்னரின் மூத்த புதல்வியான இளவரசி தனது அரசபோகத்தைத் துறப்பதற்கு முடிவு செய்துள்ளார். இளவரசியின் இந்த முடிவுக்கு அரச குடும்பத்தினர் அனுமதி அளித்திருப்பதாகத் தெரிகிறது. ஆனாலும் இளவரசி அரசபோகத்தைத் துறப்பதற்கான காரணம் என்ன என்பது பற்றி எதுவும் தெரியவில்லை.

### வட அயர்லாந்து நிலைமை

## அரசியல் தலைவர்களுடன் வைட்லோ பேச்சுவார்த்தை

லண்டன் ஜூலை 26

வட அயர்லாந்து விவகார அமைச்சர் திரு. வைட்லோ வட அயர்லாந்து நிலைமை பற்றி பல அரசியல் கட்சித் தலைவர்களுடனும் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளார். திரு. வைட்லோ வட அயர்லாந்தின் முன்னாள் பிரதமர் திரு. போக்னருடன் பேச்சுவார்த்தை நடத்தினார். வட அயர்லாந்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கு திரு. வைட்லோ எடுக்கும் நடவடிக்கைக்கு திரு. போக்னர் ஆதரவு தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

இதைவிட சோஷல் ஜனநாயகக் கட்சி, சோஷலிஸக் கட்சி ஆகியவற்றுடனும் பேச்சுவார்த்தை நடத்துவார் என திரு. வைட்லோ தெரிவித்தார்.

## சண். எழுதிய நூல்கள் சுங்கப்பகுதி பறிமுதல்

கொழும்பு, புதன்

பீகிங் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு எம். சண்முகதாசனால் எழுதப்பெற்ற இலங்கையர் சம்பந்தப்பட்ட நூற்பிரதிகள் சிலவற்றை அவர் தம்முடன் இலங்கைக்கு கொண்டுவந்த பொழுது சுங்கப்பகுதியினர் அவைகளைத் தடுத்து வைத்துள்ளனர்.

இலங்கை இடதுசாரி இயக்கங்கள் பற்றிய சிறுகுறிப்பு என்ற நூலினதும் ஒரு மார்க்ஸியவாதியின் பார்வையில் இலங்கை என்ற நூலினதும் ஆறு பிரதிகளை திரு சண்முகதாசன் தம்முடன் கொண்டுவந்தார். இந்த நூல்களை திரு சண்முகதாசன் இங்கு சிறையில் இருந்த சமயத்தில் எழுதினார். சிறையிலிருந்து விடுதலையாக அவர் வெளிநாடுகளில் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டிருந்த சமயம் திடீர் அவை அங்கு அச்சிடப்பட்டன. அவைகளின் சில பிரதிகளை திரு சண்முகதாசன் சில தினங்களுக்கு முன் நாடு திரும்பிய போது தம்முடன் எடுத்துவந்தார். அவைகளை சுங்கப் பகுதியினர் தடுத்து வைத்துள்ளனர்.

இந்த நூல்கள் ஒவ்வொன்றிலும் மூன்று பிரதிகளைக் கொண்டு வந்ததாகவும் அவைகளை சுங்கப் பகுதியினர் தடைசெய்துவிட்ட போதிலும் ஏற்கனவே இவ் பிரதிகள் நாட்டில் விற்பனையாகிவிட்டன என்றும் திரு சண்முகதாசன் தெரிவித்துள்ளார். அரசிடமிருந்து ரசீது ஒன்றை பெற்றுக் கொண்டதாகவும் புத்தகங்களைப் படித்துப் பார்த்துவிட்டு ஒரு முடிவுக்கு வரும்படி கேட்டுக் கொண்டதாகவும் திரு சண்முகதாசன் கூறினார்.

## உருகுவே தளபதி கடத்தப்பட்டு கொலை

மொன்டிவீடியோ, ஜூலை 26.

உருகுவே நாட்டின் பாதுகாப்புப்படையின் தளபதி கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்.

பாதுகாப்புப்படைத் தளபதி ஜெனரல் அல்வாரே மொன்டிவீடியோவிலுள்ள தனது இல்லத்திலிருந்து வெளியில் செல்லும் பொழுதே கடத்தப்பட்டு துப்பமாரோ கொரில்லாக்களால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

துப்பமாரோ கொரில்லாக்களினால் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டவர்களில் இவரே உயர் அதிகாரியாகும்!

### தமிழ் நாட்டில் பயிற்சி பெறுவார்

அல்லைப்பிட்டி, புதன்

வேலணை பனம்பொருள் உற்பத்தியாளர் விற்பனவுச் சங்கத்தின் தலைவர் திரு. வ. சண்முகராசா பனம் பொருட்பற்றிய தொழில்நுட்ப அறிவைப் பெறும் பொருட்டு தமிழ் நாட்டிற்குச் சென்றுள்ளார். இவர் அங்குள்ள பனம்பொருள் ஆராய்ச்சி நிலையங்களில் பதநீர் அடைத்தல், சீனி உற்பத்தி முதலியவற்றில் பயிற்சி பெறுவார்.

### மீண்டும் தலைவரானார்

கோட்டை, புதன்

திரு. சி. சிறிராமநாதன் மறுபடியும் வழக்கறிஞர் சங்கத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை பகிரங்க வழக்கறிஞர் சங்கக் கட்டடத்தில் நடைபெற்ற சங்கத்தின் 29-வது வருடாந்த பொதுக்கூட்டத்தில் திரு. சி. சிறிராமநாதன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். 1967-ம் ஆண்டில் இருந்து திரு. ராமநாதன் சங்கத்தின் தலைவர் பதவியை வகித்து வருகிறார்.

## பிரி. அரசு நடவடிக்கைக்கு காமன்ஸ் சபை ஆதரவு

லண்டன்; ஜூலை 26

பிரிட்டனில் துறைமுகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தினால் அங்கு ஏற்பட்டுள்ள தொழில்துறை நெருக்கடி சம்பந்தமாக பிரிட்டிஷ் அரசு எடுத்த நடவடிக்கைக்கு பிரிட்டிஷ் காமன்ஸ்சபை ஆதரவு தெரிவித்துள்ளது.

தொழில்துறை நெருக்கடி பற்றி இன்று காமன்ஸ் சபையில் சூடான விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தின்பொழுது பிரதமர் ஹீத்தும் அவரது மந்திரி சபையும் தாமாகவே தமக்குச் சிறைவாசம் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. வில்சன் குற்றஞ்சாட்டினார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய பிரதமர் ஹீத், தொழில்துறை நீதிமன்றச் சட்டத்தில் தாம் தலையிட முடியாதென்றும் இப்பொழுது நடைபெறும் வேலைநிறுத்தத்தில் 60 ஆயிரம் துறைமுகத் தொழிலாளர்களும் 30 ஆயிரம் வேறு சில தொழிலாளர்களுமே பங்குபற்றுகின்றனர். ஆனால் நாட்டில் இரண்டரைக் கோடி தொழிலாளர்கள் இருக்கின்றனர் என்றார்.

இதேவேளையில் 35 ஆயிரம் சரக்குத் தொழிலாளர்கள் அடையாள வேலைநிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்துள்ளனர்.

லண்டன் பஸ் தொழிலாளர்கள் இன்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்தத்தை மேற்கொண்டனர். விமானப் பணியாளர்கள் தொழில்நுட்ப நிபுணர்கள் ஆகியோரும் வேலைநிறுத்தம் செய்தனர் எனச் சொல்லப்படுகிறது.

சிறையில் வைக்கப்பட்டிருக்கும் ஐந்து தொழிற்சங்கத் தலைவர்களையும் விடுதலை செய்வது சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் மேற்கொண்டு எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கை பற்றியும் தொழிற்சங்கத் தலைவர்கள் கூடி ஆராய்கின்றனர்.

**பிரான்ஸில் மறுப்பு**

பிரிட்டிஷ் கப்பல்களிலிருந்து பொருட்களை ஏற்றி இறக்க பிரெஞ்சுத் துறைமுகத் தொழிலாளர்கள் மறுத்துவிட்டனர்;

## 'ஆசிரியர் சங்க வளர்ச்சிக்கு உழைக்கவேண்டும்'

யாழ்ப்பாணம், வியா.

'ஒரு ஆசிரியனின் தொழிற் பாதுகாப்புக்கு உரியது ஆசிரியர் சங்கம். ஆசிரியர்களின் தொழிற் பாதுகாப்புக்கு நீண்டகாலம் பணிபுரிந்த வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் ஆசிரிய குழாத்தின் முதுகெலும்பென நிகழ்ந்து வந்ததை எவரும் மறுக்க முடியாது. எமது ஆசிரியர் சங்க வளர்ச்சியில் முக்கிய அக்கறைகொண்டுள்ள எமது அங்கத்தவர்களின் நலனில் நாம் ஒவ்வொருவரும் முக்கிய கவனம் செலுத்துதல் வேண்டும். எமது சங்க வளர்ச்சிக்கு அங்கத்தவர்களை மேலும் மேலும் பெருக்க கிளைச்சங்க உத்தியோகத்தர் இன்னும் நன்றாகத் தொழிற்பட வேண்டும். இந்த ஆண்டு இறுதியில் கிளைச்சங்கங்கள் தமக்கு வருடாந்தக் கட்டடங்களைக் கட்டிவிடவேண்டும்'.

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்க நிர்வாக சபைக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிப் பேசிய சங்கத்தலைவர் பண்டிதர் க பொன்னுத்துரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் ஆசிரியர் சங்கக்கட்டிடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பண்டிதர் க பொன்னுத்துரை தொடர்ந்து பேசுகையில் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் எதிர்கால வளர்ச்சி மேலும் சிறப்படையவேண்டின் மாகாண சங்கத்தைச் சேர்ந்த நாம் சங்கப்பணிகளில் மிகவும் உன்னிப்பாகப் பங்கெடுக்க வேண்டும்' என்றார்.

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்க நிர்வாகசபைப் பிரதிநிதிகளாக திருவாளர்கள் பண்டிதர் க பொன்னுத்துரை, இ வேலாயுதர், த இராசரத்தினம், சி நடராசா, த இராசேந்திரம் என்போர் ஏகமனதாகத் தெரியப்பட்டனர்.

கிளைச்சங்கங்கள் வட்டாரந்தோறும் விசேஷ பொதுக் கூட்டங்களைக் கூட்டி கருத்தரங்குகளை நடத்துவதென்ற முடிவும் எடுக்கப்பட்டது.

...க்குமா?

# அமெரிக்காவுடன் தொடர்பும் சூயஸ்கால்வாய் திறப்பும்

## சதாத்தின் திட்டமாம்

ஜெருசலம், ஜூலை 26 சூயஸ்கால்வாயைத் திறப்பது பற்றியும் இஸ்ரேலுடனான பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது குறித்தும் எகிப்திய ஜனாதிபதி திரு. அன்வர் சதாத் அமெரிக்க அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாக 'ஜெருசலம் போஸ்ட்' என்னும் பத்திரிகை ராஜதந்திர வட்டாரங்களை ஆதாரம் காட்டி எழுதியுள்ளது.

அமெரிக்க உயர் அதிகாரிகளுடன் இதுபற்றிப் பேசுவதற்கு ஒழுங்குகள் செய்யுமாறு திரு. சதாத் அவரது உதவியாளர்களுக்குக் கட்டளையிட்டதாகவும் அதன்படி ஜனாதிபதியின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் திரு ஹாபேஸ் இஸ்மாயில் வெய்ரோசிலுள்ள அமெரிக்கப் பிரதிநிதி திரு. ஜோசேப் ...

நிபுணர்களையும் வெளியேற்றிய சதாத்தின் நடவடிக்கை இஸ்ரேல்-அரபு சமாதானத்துக்கு இடப்பட்ட வித்து என்று அமெரிக்க அதிகாரிகள் கருதுகின்றனர்.

இஸ்ரேல் கைப்பற்றிய அரபுப் பிரதேசங்களிலிருந்து இஸ்ரேலியரை வெளியேற்றுவதற்கு உலக அபிப்பிராயத்தைத் திரட்டுவதும் இஸ்ரேலுக்கு உதவும் அமெரிக்க கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்துவதுமே சதாத்தின் நோக்கமாம்.

உலக சமாதானத்துக்குச் சவால்விடுவதாக அதி...

...

## பிரிட்டிஷ் ஆயுதங்கள்

...

# இனி ஆடிவேல் விழா நடக்குமா?

சமுத்திலிருந்த இந்திய வர்த்தகர்கள் வெளியேறி வருவதால் இனி கொழும்பிலே ஆடிவேல் விழா நடைபெறுமா? என்ற சந்தேகமுண்டு. ஏனெனில் கொழும்பு நகரிலே ஆடிவேல் விழா நடக்கும் சம்மாங்கோடு செட்டியார் தெரு கதிர்வேலாயுதசுவாமி கோவிலைக் கட்டி அவ்விழாவினை சுமார் நூறு ஆண்டுகளாக நடத்தி வருவது இந்தியச் சைவ வர்த்தக சமூகத்தார் தான்.

சம்மாங்கோடு கதிர்வேலாயுதசுவாமி கோவிலைக் கட்டி விழா நடத்துபவர்கள் தஞ்சை, திருச்சி மாவட்டங்களைச் சேர்ந்த பிள்ளைமார்கள். செட்டியார் தெருவிலுள்ள இரு கோவில்களையும் கட்டி நடத்துபவர்கள் நகரத்தார் சமூகத்தி...

இவர்கள் குடும்பத்தார் தம்பன், தாய், மகன் இவர்கள் ஆளுக்கு ஒரு தேங்காய் கொண்டுவந்து சிரம் குனிந்து, பயபக்தியுடன் ரதத்துக்கு முன்பாக விடலையாக உடைத்து வழிபட்ட காட்சியைக் கண்டேன். அவ்வளவு பக்தியை தமிழர்களிடமும் காணவில்லை.

ரதத்தின்மீது கதிர்வேலாயுதசுவாமி அழகாக மஞ்சத்தில் அமர்ந்து ஆடி அருள்பாலித்து வந்தார். "சுவாமி! இந்நாட்டிலே இனி தமிழருக்கு என்ன? தமிழ் மொழிக்குத்தான் இடமுண்டா?" என்று கேட்டேன். சுவாமி ஒன்றும் பேசாமல் புன்முறுவல் பூத்தார். "தமிழின் கடவுளையும் வாழவைக்கும் தமிழ்க் கடவுளென்று உன்னைச் சொல்வார்களே! தமிழரையும் தமிழையும் நீ கைவிட்டுவிடுவாயா?" மற்றவர் ...

...

# 'எமது கலை கலாச்சாரத்தை வளர்க்க வேண்டும்'

...

# வீட்டுவேலை செய்யும் நாய்

...

# கொள்ளைக் கோஷ்டிதான் காரணமாம்

...

# ஜயாரன் எழுதுவது

...

...க அதிபர் ...டுப்பாரா?

...

...தாமகர் தினமும் ...சளிப்பு விழாவும்

...

(8-ம் பக்கம் பார்க்க)

